**செய்தி வெளியீடு எண். 642** **நாள்– 29.07.2010**

## செய்தி வெளியீடு

**சென்னை மாநகரிலுள்ள நியாயவிலைக் கடைகளுக்கு மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் சென்று திடீர் ஆய்வு**

**போக்குவரத்துக் கழக பயணிகள் பேருந்துகளில் அரிசி கடத்துவதற்கு உடந்தையாக செயல்படும் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்கள் மீது துறை நடவடிக்கை மற்றும் அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்**

**1 பட்டியல் எழுத்தர், 1 எடையாளர் தற்காலிகப் பணி நீக்கம்**

**மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் ஆணை**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் உணவுத் துறை உயர் அலுவலர்கள் மற்றும் ஆய்வு குழுவினர்களுடன் இன்று (29.07.2010) காலை 9.00 மணிக்கு நியாயவிலைக் கடைகள் தோறும் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்கள்.

சென்னையிலுள்ள உணவு பொருள் வழங்கல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் இன்று (29.07.2010) காலை 8.00 மணிக்கு கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அலுவலகக் கூட்ட அரங்கில் குழுமியிருந்தார்கள். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் வந்தவுடன், சென்னையிலுள்ள அனைத்து பகுதிகளிலும் பொது விநியோகத் திட்டச் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக, கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் நிலையிலுள்ள ஒரு அலுவலரை குழு தலைவராகவும், அவருக்கு உதவியாக 3 அலுவலர்களையும் உள்ளடக்கிய ஒரு குழுவினை அமைத்து, அக்குழுவினை சென்னையிலுள்ள 16 உதவி ஆணையாளர் மண்டலங்களுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு அனுப்பியும், அவர்கள் ஆய்வு மேற்கொள்ளும்போது எந்தெந்த இனங்களில் எவ்வாறு ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்றும் தெளிவாக அறிவுறுத்தினார்கள். ஆய்வுக் குழுக்களை ஒவ்வொரு மண்டலத்திற்கு அனுப்பியதற்கு பின்பு, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், உணவுத் துறை முதன்மைச் செயலர், நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், உணவு பொருள் வழங்கல் துறை இணை ஆணையாளர் மற்றும் உயர் அலுவலர்களுடன் சென்னை, இராயபுரத்திலுள்ள வண்ணாரப்பேட்டை கூட்டுறவு மொத்த பண்டகசாலையின் நியாயவிலைக் கடை எண்.009, BF005, வட சென்னை கூட்டுறவு மொத்த பண்டகசாலையின் இராயபுரம், டிபிகே தெருவிலுள்ள நியாயவிலைக் கடை BEO 18, கொருக்குப்பேட்டை, இராமசாமி தெரு, கார்னேசன் நகரிலுள்ள நியாயவிலைக் கடை, கொருக்குப்பேட்டை மணலி ரோடில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நியாயவிலைக் கடைகளிலும், தென் சென்னையில் மைலாப்பூர், காரணீஸ்வரர் கோயில் தெரு, பக்கோடா தெருவிலுள்ள அமுதம் கடை எண்.1 மற்றும் அமுதம் கடை எண்.2 ஆகியவற்றிலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நந்தனம் கிடங்கிலும் ஆய்வு மேற்கொண்டார்கள்.

வண்ணாரப்பேட்டை கூட்டுறவு மொத்த பண்டகசாலையின் கடையில் 1800 குடும்ப அட்டைகளுக்கு மேல் இருந்ததால், கடையை இரண்டாக பிரிக்க ஆணையிட்டார்கள். அங்கு கூடியிருந்த பொது மக்களிடம் விசாரணை மேற்கொண்டதில், ஜுலை மாதத்தில் கடையிலுள்ள வழங்கல் பதிவேட்டில் மண்ணெண்ணெய் வழங்கியதாக பதிவு செய்து விட்டு, குடும்ப அட்டையில் பதிவு செய்யாமலும், பொருள் நிறுத்தம் செய்யப்பட்ட குடும்ப அட்டைகளுக்கு பொருள் வழங்கப்பட்டதையும் கண்டறிந்தார்கள். மேலும், பெரும்பாலான மக்கள் நியாயவிலைக் கடை விற்பனையாளர் மீது புகார் தெரிவித்ததைத் தொடர்ந்து, கடை விற்பனையாளர்

திரு. வரதராஜன் அவர்களை தற்காலிகப் பணி நீக்கம் செய்யவும், கடையில் 100 சதவீதத் தணிக்கைப் பணி மேற்கொள்ளவும் ஆணையிட்டார்கள்.

இராயபுரம், வட சென்னை கூட்டுறவு மொத்த பண்டகசாலையின் டிபிகே தெரு, BEO 18 நியாயவிலைக் கடையில் மின்னணு தராசினை உபயோகித்து பொருட்களை சரியான எடையில் வழங்குவதாகவும், அனைத்துப் பொருட்களும் முறையாக வழங்கிவருவதாகவும், கடையில் குழுமியிருந்த பொது மக்கள் தெரிவித்ததை கண்டு திருப்தி தெரிவித்தார்கள்.

கொருக்குப்பேட்டை, கார்னேசன் நகர் இராமசாமி தெருவிலுள்ள வட சென்னை கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் நியாயவிலை கடையின் எடையாளர் அரசு ஆணைப்படி செயல்படாமல், தன்னிச்சையாக குடும்ப அட்டைதாரர்களுக்கு குறைவாக அரிசி வழங்கியதாலும், வழங்கல் பதிவேட்டில் பதிவு செய்துவிட்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி வழங்காமல் இருந்ததாலும், போலி பட்டியல் தயாரித்தது, சர்க்கரை, கோதுமை, உளுத்தம் பருப்பு, பாமாயில் ஆகியவற்றில் இருப்பு குறைவு இருந்ததாலும் நியாயவிலைக் கடை எடையாளர் திரு. குலசேகர் என்பவரை உடனடியாக தற்காலிகப் பணிநீக்கம் செய்யவும் ஆணையிட்டார்கள்.

கொருக்குப்பேட்டை மணலி ரோடில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நியாயவிலைக் கடையில் கூடியிருந்த பொது மக்களை விசாரணை செய்தபோது தங்களுக்கு அனைத்து பொருட்களும் சரியாக வழங்கப்படுகிறது என்பதை அறிந்து திருப்பி அடைந்தார்கள்.

சென்னை மைலாப்பூர், காரணீஸ்வரர் கோயில் தெருவிலுள்ள அமுதம் கடை எண்.1 ல் பெரும்பாலான அத்தியாவசியப் பொருட்கள் இருப்பு குறைவாக இருந்தது கண்டறியப்பட்டது. எனவே, இந்த கடை விற்பனையாளர் மீது முழுமையாக விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கவும், அமுதம் கடை எண்.2ல் 15 லிட்டர் மண்ணெண்ணெய் இருப்பு குறைவு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு, அதற்காக அபராதம் விதிக்கும்படி ஆணையிட்டார்கள். மேலும், அந்த தெருவில் உள்ள வீடுகளுக்குச் சென்று, அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் முறையாக வழங்கப்படுகிறதா என்பதை கேட்டறிந்தார்கள்.

நந்தனம் கிடங்கின் ஆய்வின் போது கிடங்கில் சமச்சீர் இட்டு அடுக்கி வைக்கப்பட்டிருந்த (Standardised bags) உளுந்து மூட்டைகளை மறு எடை போட்டு பார்த்து எடை சரியாக இருந்ததை கண்டறிந்தார்கள். கிடங்கினை சுற்றி, அதிக அளவில் பள்ளமும் மேடுமாக இருந்து, அதில் தண்ணீர் தேங்கியிருந்ததை கண்டறிந்து, உடனடியாக கிடங்கை சுற்றி மண் அடித்து பாதையை சீர் செய்யும்படியும், வடிகால் வசதி செய்து தரும்படியும், கிடங்கின் உள்ளே ஒட்டடை, தூசி இருந்ததை கண்டு, அதனை சரிசெய்ய போதிய அளவு ஒட்டடைக் குச்சி, ஏணி ஆகியவைகள் வாங்கி அளித்திட நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநருக்கு ஆணையிட்டார்கள்.

மேலும், பொது விநியோகத் திட்டப் பொருட்கள் வழங்குவது மற்றும் விற்பனையாளர்களின் சேவையில் எதேனும் குறைபாடுகள் இருப்பின் உடனடியாக அந்தந்த நியாயவிலைக் கடைகளிலே உள்ள புகார் தெரிவிக்கப்பட வேண்டிய தொலைபேசி எண்களுக்கும், மாநில நுகர்வோர் சேவை மையம் எண்.28592828க்கும், புகார்களைத் தெரிவிக்கும்படி அறிவுறுத்தினார்கள்.

தல ஆய்வு முடிவு பெற்ற பின்னர், மாலை 5.00 மணிக்கு சென்னை, கோபாலபுரம் முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகக் கூட்ட அரங்கத்தில் உணவுப் பொருள் வழங்கல் துறை, கூட்டுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றால் சென்னை மாநகரில் பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்தும் அலுவலர்களின் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

ஆய்வு கூட்டத்தை தொடங்கி வைத்து மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் உரையாற்றுகையில் நியாயவிலைக் கடை என்பதை பொது மக்கள் அறியும் வண்ணம் அனைத்து நியாயவிலைக் கடைகளையும் ஒரே வண்ணத்தில் பெயிண்ட் அடித்து கடையை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஏற்கனவே அறிவுறுத்தியிருந்தும், ஒரு சில கடைகளில் ஒரே வண்ணத்தில் பெயிண்ட் அடிக்காமல் இருந்ததை கண்டறிந்த மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்

அவர்கள் உடனடியாக அனைத்து நியாயவிலைக் கடைகளையும் ஒரே வண்ணத்தில் பெயிண்ட் அடித்து கடையை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள் ;

மேலும், தமிழக எல்லையோர மாவட்டங்களான கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களுக்கு செல்லும் அரசு பேருந்துகளில் சில பயணிகள் பேருந்து ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களின் ஒத்துழைப்புடன் பொது விநியோகத் திட்ட அரிசியை கடத்துவதாக தகவல்கள் பெறப்படுகிறது. அவ்வாறு செயல்படும் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்கள் மீது 6 (4) of TNSC (RDCS) Order, 1982 r/w 7(1) a (ii) of EC Act, 1955ன் கீழ் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதுடன், குற்ற வழக்கு தொடரப்படும் என்றும் தெரிவித்தார்கள்.

சென்னையிலுள்ள 251 நியாயவிலைக் கடைகளுக்கு கட்டிடங்கள் கட்ட தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்; 1,600 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாயவிலைக் கடைகளை இரண்டாக பிரிக்க உடனடியாக பிரிக்கப்பட வேண்டும்; சிறப்பு பொது விநியோகத் திட்டத்தினை முனைப்புடன் செயல்படுத்தினால் பொது மக்கள் மேலும் பயனடைவார்கள் என்றும் தெரிவிரித்தார்கள்.

உதவி ஆணையாளர்களின் கடமைகள், பொறுப்புகள், அலுவலகத்தில் பெறப்படும் மனுக்கள் தீர்வு, குடும்ப அட்டைகள் தகவல் தொகுப்பை மேம்படுத்தி "அ" பதிவேட்டுடன் சரிபார்த்தல், அத்தியாவசியப் பொருட்களை ஆன்லைன் முறையில் ஒதுக்கீடு செய்தல் போன்ற இனங்களின் முன்னேற்றம் குறித்தும் ஆய்வு செய்ததுடன், ஒவ்வொரு மாதமும் நடைபெறும் வட்ட அளவிலான மக்கள் குறை தீர் கூட்டங்களில் பெறப்பட்ட மனுக்கள் அனைத்தும் உடனுக்குடன் தீர்வு செய்ய அறிவுறுத்தினார்கள்.

குடிசை மாற்று வாரிய வீடுகளில் குடியிருப்பவர்களுக்கு குடும்ப அட்டை வழங்க வேண்டும்; புதிய குடும்ப அட்டை 60 நாட்களுக்குள் வழங்க வேண்டும்; தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்களுக்கு 30 நாட்களுக்குள் பதில் அனுப்ப வேண்டும்; குடும்ப அட்டைகளில் மாற்றம் செய்யக் கோரும் விவரங்களை விசாரணை செய்து அன்றே பதிவு மாற்றம் செய்து கொடுக்கப்பட வேண்டும்; மக்கள் சாசன விவரங்களை உதவி ஆணையர் அலுவலக தகவல் பலகையில் பிரசுரிக்கப்பட வேண்டும் என்று அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

சென்னையிலுள்ள 16 மண்டலங்களுக்கும் அனுப்பப்பட்ட ஆய்வுக் குழுக்களின் அறிக்கைகளை ஒவ்வொன்றாக ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தினார்கள்.

அதன் பிறகு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் (தெற்கு) மற்றும் (வடக்கு), இணைப்பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்) 1 மற்றும் 2 ஆகியோர்களின் செயல்பாட்டினை தனித்தனியாக ஆய்வு செய்து எவ்வித குறைபாடுகளுமின்றி செயல்பட அறிவுரை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், திரு. ஸ்வரன் சிங், இ.ஆ.ப., முதன்மை செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, திரு. வீர சண்முக மணி, இ.ஆ.ப., நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், திரு. ஜித்தேந்த்ரநாத் ஸ்வைன், இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், திரு. சி.என். மகேஸ்வரன், இணை ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மற்றும் திரு. சுந்தரமூர்த்தி, இ.கா.ப., காவல் துறை தலைவர், குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுத் துறை ஆகிய உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**